சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஹாஸ்டலில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களினுடைய தொகை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், மேலும் அதிகப்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கத்தின் நிதி நிலையை அனுசரித்து, அந்தத் தொகையை இப்பொழுது உயர்த்துவதற்கில்லை. இருந்தாலும் கூடுமானவரை பத்து சதவீதம் அதிகமாக ஒவ்வொரு விடுதியிலும் சேர்த்துக்கொள்ளுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

வானொலியில் மகளிர் பகுதி

*55 வினா.—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல—செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வானொலியில் ஒரு குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே மகளிர் பகுதி இடம் பெற்றுள்ளதை மாற்றி தினமும் மகளிர் பகுதி இடம் பெற மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு சிபார்சு செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 137, 138, 139, 140 ஆகிய எண்களுள்ள கேள்விகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

இப்பொழுது 141 எண்ணுள்ள கேள்வி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

Aluminium industry

*** 141 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state with reference to question No. 45 answered on the floor of the Assembly on 22nd June 1967—**

(*a*) whether it is a fact that the aluminium industry was originally proposed to be started in the public sector ; and

(*b*) if so, how this was dropped subsequently ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) இந்தத் தொழிற்சாலை மத்திய அரசின் ஆலோசனையின்பேரில் தனியார் துறைக்கு விடப்பட்டது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலுக்குரிய மூலதனம் பெரும்பாலும் மாநில சர்க்காராலும் மத்திய சர்க்காராலும் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மின்சாரவாரியம், குறைந்த விலையில்—யூனிட்டுக்கு ஒரு பைசா என்ற அளவில்—மின்சாரம் வழங்கி வருகிறது. இதுபற்றி பதில் சொல்லுபோது, பொதுத் துறையில் ஆரம்பிப்பதற்குத் தகவல் ஒன்றும் இல்லை என்று ஏற்கனவே சொன்னார்கள். அது எவ்வாறு பொதுத் துறையில் ஆரம்பிக்காமல் விடப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1955-ம் ஆண்டில், அலுமினியத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 1955-ம் ஆண்டில் அலுமினியக் கமிட்டி என்று தனிக் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்து, அதுபற்றிய விவரங்களை ஆராயும்படியாக அந்தக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் பல இடங்களைப் பார்த்து, மேட்டூரையும் பார்த்துவிட்டு, மேட்டூரைத் தேர்ந்தெடுத்து, அங்கு ஒரு